## உயர் கல்வியில் முதல்வர் மு.க.ஸ்டாலினின் சீரிய திட்டங்களால்

# அரசு கலை - அறிவியல் கல்லூரிகளில் மாணவர்களின் சேர்க்கை தொடர்ந்து அதிகரிப்பு!

## சட்டப் பேரவையில் உயர்கல்வித்துறை மானியக் கோரிக்கையில்
## 15 அறிவிப்புகளை வெளியிட்டு அமைச்சர் முனைவர் க.பொன்முடி பதிலுரை!

**சென்னை, ஜூன் 26–**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 'புதுமைப் பெண் திட்டம்' உள்ளிட்ட சீரிய திட்டங்களால் அரசு மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகின்றது என்று சட்டப் பேரவையில் உயர்கல்வித்துறை மானியக் கோரிக்கையில் 15 அறிவிப்புகளை அறிவித்து உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி பதிலுரையில் தெரிவித்துள்ளார்.**

**சட்டப் பேரவையில் மானியக் கோரிக்கையில் அமைச்சர் முனைவர் க.பொன்முடி பதிலுரை வருமாறு:–**

இங்கே படமாக இருக்கிற தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் அவர்களையும் வணங்குகிறேன். அவரோடு இங்கே மேலும் படங்களாக இருக்கின்ற அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமின்றி, என்னோடு உயிருக்குயிராய் பழகி, இந்த சட்டமன்றத்திலேயிருந்து இப்போது பிரிந்துவிட்ட, என் அன்பு நண்பர் திரு நா. புகழேந்தி அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். உயர்கல்வி என்று சொன்னால், அது முத்தமிழறிஞர் கலைஞர் காலத்திலே வளர்ந்ததுதான். ஆரம்பக் கல்விக்கு பெருந்தலைவர் காமராஜர் என்பார்கள். உயர்கல்விக்கு நம்முடைய தலைவர் கலைஞர் என்பார்கள். கலைஞருடைய காலத்திலேதான் தமிழகத்தில் பல்வேறு கல்லூரிகள் உருவாக்கப்பட்டன. மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்று அறிவித்தவர் தலைவர் கலைஞர்தான். அவர் காலத்தில்தான் தமிழகத்திலே உயர்கல்வி வளர்ந்தது என்றால் அது மிகையாகாது. உயர் கல்வி வளர்ந்தது மட்டுமல்ல. அந்த உயர்கல்வியிலே நாங்களெல்லாம் படிக்கின்றபோது, ஆங்கில வழியில் மட்டும்தான் படிக்க முடியும் என்றிருந்த காலம் ஒன்று உண்டு.

1960-களில், 1970-களிலெல்லாம் ஆங்கில வழி மட்டும்தான், only English medium. அதை தமிழ்வழியிலேயும் படிக்கலாம் என்று முதன்முதலாக, அனைத்துப் பாடங்களிலும், முதன்முதலாக பேரறிஞர் அண்ணா அவர்கள் கலைப் பாடங்களிலே கொண்டு வந்தார். அனைத்துப் பாடங்களிலும் தமிழ் வழியிலே படிக்கலாம் என்று கொண்டுவந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

அந்தத் தமிழ் வளர்த்த, உயர் கல்வி வளர்த்த, என் தலைவர் கலைஞர் அவர்களுடைய நினைவாக இந்த உயர் கல்வித் துறையினுடைய அறிக்கையை நான் உங்கள் முன்னால் சமர்ப்பிக்க விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, உயர் கல்வி என்று சொன்னால் தமிழ்நாடுதான் உயர்ந்து நிற்கிறது. அதற்குக் காரணமாக பெரியார், அண்ணா, கலைஞர் வழியிலே இன்று திராவிட மாடல் ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிற நம்முடைய தமிழக முதல்வர் தளபதி அவர்கள், அவர் ஆற்றியிருக்கிற பணி இந்த மூன்று ஆண்டுகளிலே கொஞ்சம் நஞ்சமல்ல. அவர்தான் அடிக்கடி சொல்வார், "என்னுடைய இரண்டு கண்கள், ஒன்று கல்வித் துறை, மற்றொன்று சுகாதாரத் துறை" என்று சொல்வார்கள். அந்த கல்வியும், சுகாதாரமும் வளர வேண்டுமென்று எல்லா நிகழ்வுகளிலேயும் பேசுகிறவர் நம்முடைய தமிழக முதல்வர். அந்த அடிப்படையில் தான் ஆரம்பக் கல்வியாக இருந்தாலும், உயர் கல்வியாக இருந்தாலும், இந்த நாட்டிலே, தமிழகத்திலே கல்வி வளர்ச்சி பெற வேண்டும். கல்வி வளர்ச்சி பெறுவது மட்டுமல்ல, அது அனைத்து சமுதாயத்தினருக்கும் சென்றடைய வேண்டும். அனைத்து சமுதாயத்திற்கும் சென்றடைவது மட்டுமல்ல, அது சிறந்த கல்வியாக, அது மிகச்சிறந்த, உலகளவிலே சிறந்த கல்வியாக இருக்க வேண்டுமென்று எண்ணியவர் தான் நம்முடைய தமிழக முதல்வர், நம்முடைய தளபதி அவர்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

**'நான் முதல்வன் திட்டம்'!**

அந்த அடிப்படையிலே, அவர் கொண்டுவந்த திட்டம்தான் 'நான் முதல்வன்' திட்டம். இங்கே இருக்கின்ற நம்முடைய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் தான் 'நான் முதல்வன்' திட்டத்திற்கு பொறுப்பானவர். அவர் அந்த 'நான் முதல்வன்' திட்டத்தை வளர்த்துக் கொண்டிருக்கிறார். அதை யாரும் மறுக்க முடியாது. 'நான் முதல்வன்' திட்டத்தின்கீழ் தற்போது 25 மாணாக்கர்கள் லண்டன் சென்று வந்திருக்கிறார்கள் என்றால், அதற்கான ஏற்பாட்டைச் செய்தவரும் அவர் தான். அத்திட்டம் உயர் கல்வித் துறையின்கீழ் செயல்படுத்தப்பட்டாலும்கூட, 'நான் முதல்வன்' திட்டத்தை அவர்தான் கவனித்து வருகிறார். இதையெல்லாம் இந்தச் சட்டமன்றத்திலே பேசுவதற்கு எங்களுக்கு உறுதுணையாக இருக்கிற நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய உளமார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தற்போது அவையிலிருந்து வெளியில் சென்றிருந்தாலும், நம்முடைய அவை முன்னவர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அமைச்சர் பெருமக்களுக்கும், இங்கேயிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய உளமார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அவர்களைத்தான் அமைச்சர் பெருமக்கள் என்று சொல்லிவிட்டேனே!

**புதுமைப் பெண் திட்டம்!**

இங்கே நான் ஏற்கெனவே சொன்னதைப் போல, உயர் கல்வி என்பது தமிழகத்திலே உயர்ந்து இருக்கிறது என்று சொன்னால், அதற்கு திராவிட மாடல் ஆட்சிதான் காரணம் என்பதை யாரும் மறுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) தந்தை பெரியார் திராவிட மாடல் பெரியார் சொன்னதெல்லாம் அனைவரும் படிக்க வேண்டும் என்பதுதான். பெண்களுக்கு கல்வி உரிமையே இல்லாமல் இருந்த காலமும் உண்டு. 'அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பதெற்கு' என்று சொன்ன காலம் இருந்தது. பாருங்கள், அந்த பெண் உறுப்பினர்கூட சிரிக்கிறார். அதுபோன்று இருந்த காலமும் உண்டு. ஆனால், இன்று பெண்களெல்லாம் படித்துவிட்டு, குறிப்பாக, தற்போது மேலும் அதிகமாக வளர்ந்திருக்கிறார்கள் என்று சொன்னால், அதற்குக் காரணம் முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற 'புதுமைப் பெண் திட்டம்'. அத்திட்டத்தின் மூலமாக அரசுப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவிகள், உயர் கல்விக்குச் சென்றால் அவர்களுக்கு மாதம் ரூ.1,000/- வழங்கப்படுகிறது. இது சாதாரணமான விஷயமல்ல. கல்லூரிகளில் படித்தவர்கள் இங்கு நிறைய பேர் இருக்கிறார்கள். நாம் எல்லாம் படிக்கும்போது hostel fees, college fees கட்ட முடியாமல் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்போம்? ஆனால், இன்று தமிழக முதலமைச்சர் தளபதி அவர்களின் 'புதுமைப் பெண்' திட்டத்தின் மூலமாக மகளிர் பயனடைந்திருக்கின்றனர்.

**தமிழ்ப்புதல்வன் திட்டம்!**

மாணவிகளுக்குத்தான் கொடுத்தார்கள், எங்களுக்கெல்லாம் கிடையாதா என்று மாணவர்களெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த இந்தச் சூழ்நிலையில், இந்த ஆண்டு முதல் 'தமிழ் புதல்வன்' என்ற திட்டத்தின் மூலமாக அவர்களுக்கும் இந்த நிதியுதவி வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிற முதலமைச்சர்தான் நம்முடைய தமிழக முதலமைச்சர் தளபதி அவர்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் கல்வி வளர்ச்சி. எல்லோரும் படிக்க வேண்டும்; எல்லோரும் உயர் கல்வியும் படிக்க வேண்டும். அந்தக் காலத்தில் ஆரம்பக் கல்வி படிக்கும் போது, அதாவது 5 ஆம் வகுப்பு, ESLC என்று இருந்ததையெல்லாம் நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். 8 ஆம் வகுப்பு என்று சொல்லக்கூடிய ESLC தேர்வுகளிலேயே பாதிபேர் தோல்வியடைந்து வெளியேறிவிடுவார்கள். அதற்குப் பிறகு படிப்பைத் தொடரவே மாட்டார்கள். அப்படியிருந்த காலமும் உண்டு. ESLC காலம் போன பின்னர், SSLC வந்தது. தற்போது SSLC-யும் முடிந்து, 10th, +2 எல்லாம் வந்திருக்கிறது. முன்பிருந்த PUC முறையெல்லாம் மாறி, தற்போது கல்வித் திட்டமே மாறி வளர்ந்திருக்கிறது என்று சொன்னால், அதற்குக் காரணம் திராவிட மாடல் ஆட்சிதான் என்பதை யாரும் மறுக்க முடியாது.

## கல்வித் திட்டமே மாற்றமடைந்ததற்கு காரணம் 'திராவிட மாடல்' ஆட்சிதான்!

அதுபோன்றுதான், 'புதுமைப் பெண்' திட்டத்தின் மூலமாக, 2021-2022 ஆம் ஆண்டில் 43,619 மாணவிகள் பொறியியல் கல்வி படித்தார்கள். 2022-2023 ஆம் ஆண்டில் 54,004 மாணவிகள், 2023-2024 ஆம் ஆண்டில் 63,270 மாணவிகள். ஆகவே, இவ்வாறு 2.73 இலட்சம் பெண்கள் மாதம் ரூ.1000/- பெற்று பயனடைந்திருக்கிறார்கள். அவர்கள் படித்ததுதான் அரசுப் பள்ளி. கல்லூரிக் கல்வி என்று எடுத்துக்கொண்டால், அரசுக் கல்லூரியாக இருந்தாலும், தனியார் கல்லூரியாக இருந்தாலும், எந்தக் கல்லூரியில் படித்தாலும் ரூ.1,000/- வழங்கப்படுகிறது. இவ்வளவு மாணவிகள் பயனடைந்திருக்கிறார்கள் என்று சொன்னேன் அல்லவா! உதாரணமாக, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் படித்த கல்லூரியான சென்னையிலுள்ள Presidency College-ல் முன்



பெல்லாம் 25% தான் மாணவிகள் படித்தார்கள். கடந்த ஆண்டில்கூட 37% தான் மாணவியர் சேர்க்கை இருந்தது. ஆனால், இந்த ஆண்டு Presidency College-ல் மாணவிகளின் சேர்க்கை 47% சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது என்றால், அதற்குக் காரணம் 'புதுமைப் பெண்' திட்டம்தான். (மேசையைத் தட்டும் ஒலி) பெரியார் சொன்ன கொள்கையைத்தான், தற்போது திராவிட மாடல் ஆட்சி நடத்துகிற தலைவர் தளபதி அவர்கள் வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு அதுதான் ஓர் உதாரணம்.

அதேபோன்றுதான் இந்த ஆண்டு 'தமிழ் புதல்வன்' திட்டமும் அறிவிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்டியிருக்கிறேன். பொதுவாக முதல்வர் தளபதி அவர்கள் உழைத்து வருகிறார்கள். கல்விக் கட்டணம் இரத்து, விலையில்லா புத்தகம், முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு இலவச கல்விச் சலுகை, தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்கு ஊக்கத் தொகை போன்ற முத்தமிழறிஞரின் திட்டங்கள் ஆகியவை, தொடர்ந்து அவருடைய வழியிலே ஆட்சி நடத்துகிற தளபதி அவர்களால் தற்போதும் செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அதுமட்டுமல்ல, தொழிற் கல்லூரிகளில் 7.5 சதவிகித இட ஒதுக்கீட்டைக் கொடுத்து அதன் மூலமாக அரசுப் பள்ளிகளில் படித்த மாணவ, மாணவிகளெல்லாம் பயன்பெறுகின்றனர். ஒரு காலத்தில் medical courses-க்கு கொடுத்தோம் கொடுத்தோம் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆனால், அதை நடைமுறைப்படுத்தவில்லை. ஆனால், இன்று தமிழக முதல்வராக தளபதி அவர்கள் வந்த பிறகுதான், அவற்றையெல்லாம் முழுமையாக செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அதன்மூலமாக இந்த 3 ஆண்டுகளில், அரசுப் பள்ளிகளிலே படித்து, பொறியியல் கல்லூரிகளிலே சேர்ந்திருக்கிற மாணவர்களுடைய எண்ணிக்கை மட்டும் 28,601 பேர். ஆகவே, எதை அறிவித்தாலும் அதைத் திறம்படச் செய்து கொண்டிருக்கிற ஒரு முதலமைச்சர்தான் நம்முடைய தமிழக முதலமைச்சர் தளபதி என்பதை மறுக்கமுடியாது. அதேபோல, இங்கே பேசுகிற பொழுது நம்முடைய உறுப்பினர் மணி அவர்கள் சொன்னார் ஆராய்ச்சிப் படிப்பிற்காக, ஆராய்ச்சிக் கல்வி வளர்வதற்காக ஒன்றும் செய்யவில்லை என்று சொன்னார். ஆனால், ஆராய்ச்சிக் கல்விக்காக முதலமைச்சர் அவர்களின் ஆராய்ச்சி ஊக்கத்தொகை என்று அறிவித்து 50 கோடி ரூபாய் அறிவித்திருக்கிறார். அதன்மூலமாக ஆண்டுக்கு 25 ஆயிரம் ரூபாய் வீதம் 3 ஆண்டுகளுக்கு 120 மாணவர்கள் இதனால் பயனடைந்து கொண்டிருக்கிறார்கள். ஏனெனில், research அது மிகமுக்கியமான ஒன்று. நாங்களெல்லாம் படிக்கும்போது FIP - Faculty Improvement Programme என்று ஒன்று இருந்தது. கல்லூரிகளிலே அரசுப் பணியாளர்களாகப் பணியாற்றுபவர்கள்கூட, அகில இந்திய அளவிலே தேர்வு செய்யப்பட்டு அவர்கள் ஆய்வு மாணவர்களாக அனுப்பப்பட்டு, சம்பளத்தோடு அனுப்பப்படுவார்கள். நானும் அப்படி சம்பளத்தோடு ஆய்வு செய்தவன்தான். அங்கே ஓர் உறுப்பினரும் கைகாட்டுகிறார் பாருங்கள். அவரும் FIP - Faculty Improvement Programme மூலமாக ஆராய்ச்சி செய்து பட்டம் பெற்றவர்தான். இங்கே இருக்கிற நம்முடைய உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா முதற்கொண்டு அந்த மாதிரி வளர்ந்திருக்கிறோம் என்றால் அந்தக் காலத்தில் அது இருந்தது. இப்பொழுதும் அந்த ஆராய்ச்சிக் கல்வி மேற்கொள்ள வேண்டும். வளர வேண்டும் என்ற உணர்வோடுதான் இதையெல்லாம் நம்முடைய தலைவர் அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, பெருந்தலைவர் காமராஜர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டத்தின்மூலமாக ஒவ்வொரு வருடமும் 200 கோடி ரூபாய் ஒதுக்கப்படுகிறது. அது பாலிடெக்னிக்/தொழிற்கல்விக்கென்று 100 கோடி ரூபாய், அரசு அறிவியல் மற்றும் கலைக் கல்லூரிகளுக்கென்று ஒரு 100 கோடி ரூபாய்., இந்த இரண்டும் ஒதுக்கப்பட்டு, மேம்படுத்துவதற்காக இந்தக் கல்லூரிகளில், வகுப்பறைகளில் அந்தமாதிரி நிறைய பேர் இப்போது சொல்லியிருப்பவர்கள் எல்லாம் அதைத்தான் சொல்கிறீர்கள். அதற்காக 200 கோடி ரூபாய் பெருந்தலைவராக இருந்த காமராஜர் அவர்கள் பெயரிலே திட்டம் உருவாக்கப்பட்டு அதுவும் செயல்படுத்தப்பட்டிருக்கிறது.

அதேபோல உயர் சிறப்பு மையங்கள் தொழில் துறை அமைப்புகளுடன் இணைந்து 4 தர நிலையை எய்திடும்பொருட்டு, ரூபாய் 3,014 கோடி மதிப்பீட்டில் 45 அரசு பலவகை தொழில் நுட்பக் கல்லூரிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

ஆக, முதல் தலைமுறைப் பட்டதாரிகளுக்கு first generation graduate கல்விக் கட்டணச் சலுகை. நம்மில் நிறைய பேர் first generation graduate ஆக படித்து வந்தவர்கள்தான். அதேபோன்று கடந்த 3 ஆண்டுகளில் first generation-ல் படிக்க வந்த சுமார் 4.13 இலட்சம் மாணவர்களுக்கு ரூபாய் ஆயிரம் கோடி வழங்கப்பட்டுள்ளது. அதேபோல, இங்கே உயர் கல்வி நிறுவனங்களை digital மயமாக்க வேண்டும் என்பதற்காக ரூபாய் 150 கோடி இந்த அரசால் ஒதுக்கப்பட்டு அதுவும் செலவு செய்யப்பட்டிருக்கிறது.

அதேபோல முத்தமிழறிஞர் கலைஞர் அரங்கம். நாங்கள் Presidency college-க்குப் போகும் போது அங்கிருக்கிற மாணவர்கள் எல்லாம் கேட்டது, எங்களுக்கு ஒரு அரங்கம் வேண்டுமென்று கேட்டார்கள். முதலமைச்சர் அவர்களும் அங்கு வந்திருந்தார்கள். அவர் ஆணையின் அடிப்படையிலே, சென்னை மாநிலக் கல்லூரியில் இரண்டாயிரம் பேர் அமரக்கூடிய வகையில் ரூபாய் 63 கோடி மதிப்பீட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அரங்கம் அமைப்பதற்கு சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராகிய உதயநிதி அவர்களும் பல்வேறு ஏற்பாடுகளைச் செய்து, அதுவும் நிறைவேற்றப்பெற்றது என்பது மறுக்கமுடியாத உண்மை.

அதேபோல இங்கே ஆராய்ச்சிக் கல்வி ஊக்கத் தொகை பற்றியும் நான் சொல்லியிருக்கிறேன். ஆசிரியர் நலன். ஏனெனில், இங்கு நிறையபேர் ஆசிரியர்களைப் பற்றித்தான் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அந்த ஆசிரியர் நலன் காக்கும் வகையில், கணினிப் பயிற்சித் திட்டத்தில் பணியமர்த்தப்பட்ட பயிற்றுநர்களுக்கு பல ஆண்டுகளாக ரூபாய் 4 ஆயிரம்தான் வழங்கப்பட்டது. அதை 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கியது நம்முடைய தமிழக முதலமைச்சர் தளபதி அவர்கள்தான். அதேபோன்று guest lecturers என்று சொல்லக்கூடிய கௌரவ விரிவுரையாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இதற்கு முன்னர் ஊதியம் 20 ஆயிரம் ரூபாயாக இருந்தது. அதை 25 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி கொடுத்ததும் முதலமைச்சர் அவர்கள் தான்.

அரசுப் பொறியியல் கல்லூரிகளிலே பணியாற்றுகின்ற guest lecturers-க்கு difference அப்போது இருந்தது. அவர்களுக்கு 15 ஆயிரம் ரூபாயாக இருந்தது. அவர்களுக்கும் 25 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளிலே இருக்கிறவர்கள் 15 ஆயிரம் ரூபாய். அவர்களுக்கும் 5 ஆயிரம் ரூபாய் உயர்த்தி 20 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி கொடுத்தவர்தான் நம்முடைய தமிழக முதலமைச்சர் தளபதி அவர்கள் என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

கட்டடங்கள் கட்டுவதைப் பொறுத்தளவில், முதலில் இருந்த Government-ல் என்ன செய்தார்களென்றால், புதிய கல்லூரிகளை அறிவித்தார்களே தவிர, அதற்கான நிதியை ஒதுக்கவில்லை. அந்தமாதிரி ஒதுக்கப்படாமல் கட்டடங்கள் இல்லாமல் 4 கல்லூரிகள் இருந்தன. அந்த ஆட்சியின் announcement தானே என்று விட்டுவிடக்கூடாது என்பதற்காக கட்டடங்கள் கட்ட வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் தாராள மனப்பான்மையோடு அதிலே 3 கல்லூரிகளுக்கு கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. ஒரு கல்லூரிக்கு இடம் தேடப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதுபோலத்தான் 21 கல்லூரிகள் கட்டப்படும்-உருவாக்கப்படும் என்று நாம் அறிவித்தோம். அந்த 21 கல்லூரிகளில், கிட்டத்தட்ட 4 கல்லூரிகள் தவிர, 4 கல்லூரிகள் கட்டப்பட்டுவிட்டன. 11 கல்லூரிகளுக்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வெகுவிரைவிலே அவற்றையும் முடிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மூன்று ஆண்டுகளில்**
**104 அறிவிப்புகள் நிறைவேற்றம்!**

அதேபோன்று, குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணாக்கர்களின் சேர்க்கை எண்ணிக்கை 20 percent அதிகரித்திருக்கிறது. 20 percent increase ஆகியிருக்கிறது. அரசு உதவிபெறும் கலைக் கல்லூரிகளில் பாடப் பிரிவுகளுக்காக 15 percent அங்கே அதிகரித்திருக்கிறது. ஆக, இப்போது இந்த நான் முதல்வன் திட்டம் அதெல்லாம் சொன்னதன் அடிப்படையில் மட்டுமல்ல; புதுமைப் பெண் திட்டமே அரசுக் கல்லூரிகளிலே படிக்கும் மாணவர்களுக்கு மட்டும் இருந்ததை அரசு உதவிபெறும் பள்ளிகளிலே படிக்கிற தமிழ் வழியிலே படித்த மாணவர்களுக்கும் நாங்கள் கொடுப்போம் என்று அறிவித்தவரும் நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள்தான். அதேபோல, சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு 10 percent அதிகரித்து ஆணை வழங்கப்படுகின்றது. ஆக, இதையெல்லாம் நாம் செய்திருக்கிறோம். இந்த 3 ஆண்டுகளில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் 111 ஆகும். அதிலே 104 அறிவிப்புகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. நடவடிக்கையில் உள்ளவை 7 ஆகும். அதைத்தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மேலும், இங்கே நம்முடைய அரசு கலைக் கல்லூரிகளைப் பொறுத்த வரையில், 171 கல்லூரிகள் இருக்கின்றன. அரசு உதவிபெறும் கல்லூரிகள் 162; சுயநிதிக் கல்லூரிகள் 1,293; ஆக, மொத்தம் 1,626 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இருக்கின்றன. அதிலே படிக்கின்ற மாணவர்களுடைய எண்ணிக்கை 3 இலட்சத்து 64 ஆயிரத்து 477 ஆகும். அவ்வளவு பேர் படித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆக, இது இன்னும் உயர்த்தப்பட வேண்டுமென்பதற்கான முயற்சிகளையும் நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

அதேபோல்தான் கல்வியியல் கல்லூரிகள் B.Ed Education எல்லாம் படிக்கிறார்கள் இல்லையா! அந்தக் கல்லூரிகளுடைய எண்ணிக்கை மொத்தம் கல்வியியலில் 59,621. ஆராய்ச்சிப் படிப்பிலே research; ஏனென்றால் அவர் ஒன்றும் ஆராய்ச்சியெல்லாம் செய்வதில்லையென்று; சொன்னார்.

அதிலே 2,234 பேர் research செய்கிறார்கள். Ph.D செய்து கொண்டிருக்கிறார்கள். நாங்கள் படிக்கிறபோது 4 பேர், 5 பேர் ஒரு university-யில் படித்தாலே அதிகம். இப்போதெல்லாம் நிறைய பல்கலைக்கழகங்களில் நிறைய ஆராய்ச்சி மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது தான் உண்மை. ஆனால், இங்கிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் பெரும்பாலும் வைத்த கோரிக்கை என்னவென்றால், என்னிடம் எழுதிக் கொடுத்ததிலும் சரி, மற்றவர்களும் சரி எங்கள் தொகுதிக்கு கல்லூரி வேண்டும்; கல்லூரி வேண்டும் என்பதுதான். ஒரு கல்லூரியை அமைப்பது என்பது சாதாரணமான விஷயமல்ல. ஒரு கல்லூரியை அமைப்பது என்பது அதற்கு மாநகராட்சி இடமாக இருந்தால் 2 ஏக்கர் நிலம் வேண்டும். அதேபோன்று நகராட்சியாக இருந்தால் 3 ஏக்கர் நிலம் வேண்டும். கிராமப்புறமாக இருந்தால் 5 ஏக்கர் நிலம் வேண்டும்.

அதுமட்டுமல்லாமல் கட்டடம் கட்டுவதற்கு 20 கோடி ரூபாய் ஒரு கல்லூரிக்கு ஒதுக்க வேண்டும். அங்கே பணியாற்றுகிற ஆசிரியர்களுக்காக தொடர் செலவாக வருடத்திற்கு 3 இலட்சம் கோடி ரூபாய் செலவாகும். அதெல்லாம் கணக்கில் வைத்து தமிழக முதல்வர் அவர்களிடமும் வேண்டுகோள் வைத்திருக்கிறோம். இங்கிருக்கிற மந்திரிகளெல்லாம்கூட எங்களுக்கு college வேண்டும்; college வேண்டுமென்றும், எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள்.

இது நியாயமான கோரிக்கைதான். அந்த அரசுக் கல்லூரிகளெல்லாம் எந்தத் தொகுதியில் இல்லையோ தமிழக முதல்வர் அவர்கள் அந்தத் தொகுதியில் கொடுப்போமென்று சென்ற ஆண்டே அறிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே உங்களுடைய கோரிக்கைகள் முதல்வர் அவர்களிடம் கொண்டு செல்லப்பட்டு, நிதிநிலைக்கேற்ப அவை வருங்காலத்திலே அறிவிக்கப்படுமென்றும் அறிவித்துக்கொள்கிறேன்.

தொடர்ச்சி 4–ஆம் பக்கம்